பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**29 11 2025 SATURDAY 7.15 PM**

**ஆகாஷவாணி**

***தலைப்புச் செய்திகள்***

1. பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

2. உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட Taragiri போர் கப்பல் இந்திய கடற்படையில் சேர்க்கப்பட்டது.

3. காசி தமிழ் சங்கமத்திற்கான சிறப்பு ரயில் இன்று கன்னியாகுமரியிலிருந்து புறப்பட்டது.

4. Ditwah புயலால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

5. சையத் மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

---- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள வானொலி நிலையங்கள் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<>>>>>

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட Taragiri போர் கப்பல் இந்திய கடற்படையில் சேர்க்கப்பட்டது.

மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த போர் கப்பல் இணைக்கப்பட்டது.

அதிநவீன தொழிநுட்பத்தை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட இந்த போர் கப்பல், சுயசார்பு இந்தியாவிற்கு எடுத்தக்காட்டாக இருப்பதாக இந்திய கடற்படை கூறியுள்ளது.

<<<<<>>>>>

தேர்தல் ஆணையத்தின் ECI Net செயலியை எளிமையாக பயன்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்குமாறு பொதுமக்களிடமிருந்து கருத்துக்கள் கோரப்பட்டுள்ளன.

பீகார் சட்டப்பேரவைத் தேர்தல் மற்றும் இடைத்தேர்தல்களின்போது சோதனை முறையில் ECI Net செயலி கொண்டுவரப்பட்டதாகவும், இதனை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை அந்த செயலியிலேயே பதிவிடுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் அடுத்த மாதம் 27-ஆம் தேதிவரை பொதுமக்கள் தங்களது ஆலோசனைகளையும், கருத்துக்களையும் இதில் பதிவிடலாம்.

அதிகாரப்பூர்வமாக இந்த செயலி நடைமுறைக்கு வரும்போது பொதுமக்கள் அளிக்கும் ஆலோசனைகளின் அடிப்படையில் உரிய மாற்றங்களை தேர்தல் ஆணையம் மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர்களுக்கான சேவையை மேம்படுத்துவது, வாக்கு சதவீதத்தை ஊக்குவிப்பது போன்ற பணிகள் இந்த செயலி மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ECI Net செயலி மூலமாக 40-க்கும் மேற்பட்ட படிவங்களை பதிவிறக்கம் செய்து பயன்படுத்திக் கொள்ளவும் வசதி செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<<>>>>>

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளில் இதுவரை 50 கோடியே 73 லட்சம் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப் பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தமிழகம், கேரளா உள்ளிட்ட 9 மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட 3 யூனியன் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளில் இதுவரை 99 புள்ளி ஐந்து மூன்று சதவீத வாக்காளர்களுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளையடுத்து, அடுத்த ஆண்டு பிப்ரவரி 7-ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<<>>>>>

கேரள மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் குறித்து கேரள தலைமை தேர்தல் அதிகாரி திரு ரத்தன் கேல்கர் இன்று அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சித் தலைவர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

வாக்காளர் பட்டியலில் இடம்பெற்ற அனைத்து வாக்காளர்களுக்கும் கணக்கீட்டு படிவங்கள் வழங்கப்பட்டு, **85** சதவீதம் படிவங்கள் பூர்த்தி செய்து பெறப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

**71** புள்ளி பூஜ்யம் இரண்டு சதவீத படிவங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

விண்ணப்பத்தை பூர்த்தி செய்த அனைத்து வாக்காளர்களின் பெயர்களும் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

**2002-**ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் இடம்பெறாத வாக்காளர்கள் குறித்து தேர்தல் பதிவு அதிகாரிகள் ஆய்வு செய்து பட்டியலில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்றும் அவர் கூறினார்.

இந்த கூட்டத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், காங்கிரஸ், பிஜேபி, முஸ்லீம் லீக், இந்திய கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

<<<<<>>>>>

காசியில் அடுத்த மாதம் 2-ஆம் தேதி தொடங்கி, 15-ஆம் தேதிவரை நடைபெறவுள்ள காசி தமிழ் சங்கமத்தில் பங்கேற்பதற்கான குழு இன்று கன்னியாகுமரியிலிருந்து ரயில் மூலம் புறப்பட்டு சென்றது.

கன்னியாகுமரியிலிருந்து 45 பேரும், திருச்சியிலிருந்து 86 பேரும், சென்னையிலிருந்து 87 பேர் உட்பட 216 பேர் முதல் கட்டமாக தமிழகத்திலிருந்து செல்கின்றனர்.

இதில், 50 தமிழ் அறிஞர்களும், 54 கலாச்சார நிபுணர்களும், ஆசியர்கள் மற்றும் மாணவர்களும் இடம்பெற்றுள்ளனர்.

<<<<<>>>>>

தென்மேற்கு வங்கக்கடலில் உருவாகியுள்ள Ditwah புயல், கடந்த ஆறு மணி நேரமாக 10 கிலோமீட்டர் வேகத்தில் வட திசையில் நகர்ந்து வருவதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது சென்னைக்கு தெற்கே 330 கிலோமீட்டர் தொலைவிலும், காரைக்காலுக்கு தென்கிழக்கே 120 கிலோமீட்டர் தொலைவிலும் மையம் கொண்டுள்ளது.

இது மேலும் தீவிரமடைந்து, வட தமிழக, புதுச்சேரி மற்றும் ஆந்திரப்பிரதேச கரையை நோக்கி வடக்கு — வடமேற்கு திசையில் நகரக்கூடும் என்றும் வானிலை அறிக்கை கூறுகிறது.

இந்த புயல் காரணமாக புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் கடல் அதிக சீற்றத்துடன் காணப்படுகிறது.

அப்பகுதிகளில் கனமழையும் பெய்து வருகிறது.

Nallavadu மீனவர் கிராமத்தில் பத்து அடிக்கும் உயரமாக அலை எழுவதாகவும், இதனால் கடல் அரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அப்பகுதியில் வசிக்கும் மீனவர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

500-க்கும் மேற்பட்ட படகுகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையே, அரக்கோணத்தில் இருந்து சென்றுள்ள 30 பேர் கொண்ட தேசிய பேரிடர் மீட்புப்படையினர் மேற்கொண்டுவரும் பணிகளை புதுச்சேரி அமைச்சர் திருமுருகன் மற்றும் மாவட்ட ஆட்சியர் மற்றும் உயரதிகாரிகள் இன்று ஆய்வு செய்தனர்.

புதுச்சேரியில் 91 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

புயலால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பு கொள்ள 1070 மற்றும் 1077 என்ற உதவி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதனிடையே, சென்னையில் இன்று மாலை செய்தியாளர்களிடம் பேசிய மாநில அமைச்சர் திரு கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன்,

**Ditwah** புயலை எதிர்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

சென்னையில் நாளை கனமழை பெய்யக்கூடும் என்பதால், பொதுமக்கள் அவசியம் இன்றி வெளியே செல்ல வேண்டாம் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

தமிழகத்தில் கனமழை எச்சரிக்கை காரணமாக சென்னை விமான நிலையத்தில் இருந்து இயக்கப்படும் 36 உள்நாட்டு விமான சேவைகள் மற்றும் 11 சர்வதேச விமான சேவைகளும் ரத்து செய்யப்பட்டுள்ளதாக சென்னை விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னை விமான நிலையத்தில் இருந்து திருச்சி, மதுரை, தூத்துக்குடி, சேலம், ஹைதராபாத், பெங்களூரு, இலங்கையின் யாழ்பாணம் உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்கு செல்லும் விமானங்கள் இன்று ரத்து செய்யப்பட்டுள்ளன.

<<<<<>>>>>

**Ditwah** புயலால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

மழை வெள்ளத்தால் 120-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததையடுத்து, பேரிடர் மீட்புப்பணிகளை

ஒருங்கிணைப்பதற்காக அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிபர் திரு அனுர குமார திசநாயக்கே தெரிவித்துள்ளார்.

நிவாரணப்பணிகளை ஒருங்கிணைப்பதற்காக கொழும்பில் அனைத்துக்கட்சி கூட்டம் நடைபெற்றது.

**Ditwah** புயல் இலங்கையிலிருந்து, தமிழக கடற்பகுதியை நோக்கி நகர்ந்து செல்வதாக அந்நாட்டு வானிலை ஆய்வு மைய தலைமை இயக்குநர் திரு அதுலா கர்ண நாயக்கே தெரிவித்துள்ளார்.

இருப்பினும், அதன் தாக்கம் காரணமாக இலங்கையில் தொடர்ந்து ஓரிரு நாட்களுக்கு மழை நீடிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

நாட்டின் பொருளாதார கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் சீர்திருத்த நடவடிக்கைகளின் பயனாக பொருளாதாரம் வலுப்பெறும் என்றும், உலக நாடுகளுடன் போட்டியிடும் திறனும் மேம்படும் என்றும் தலைமை பொருளாதார ஆலோசகர் திரு வி அனந்த்நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நடப்பு நிதியாண்டின் இரண்டாவது காலாண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளை இன்று புதுதில்லியில் வெளியிட்டு பேசிய அவர், தொழிலாளர் நடைமுறை சட்டங்கள், சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள், தனிநபர் வருமான வரி சீர்திருத்தங்கள்

போன்றவை பொருளாதார கட்டமைப்பை வலுப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன் காரணமாக, பணவீக்கம் கட்டுக்குள் இருப்பதாகவும், அரசின் முதலீட்டு செலவினங்கள் அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

உலகளாவிய பொருளாதார தாக்கங்களை உள்நாட்டில் எடுக்கப்பட்ட சீர்திருத்த நடவடிக்கை மூலம் இந்தியா சிறப்பாக கையாண்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நடப்பு நிதியாண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீட்டைவிட கூடுதலாக இருக்கும் என்றும் திரு அனந்த் நாகேஸ்வரன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

சையத் மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

லக்னோவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், **21-15, 19-21, 21-13** என்ற செட் கணக்கில் மஞ்சுநாத்தை வென்றார்.

மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Treesa Jolly** — **Gayatri Gopichand** இணையும் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

----------------

பார்வைதிறன் குறைபாடு கொண்டவர்களுக்கான மகளிர் டுவெண்டி — டுவெண்டி கிரிக்கெட் உலக்கோப்பையை வென்ற இந்திய அணியினர் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வை புதுதில்லியில் இன்று சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

**<<<<<END>>>>>**